

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.9.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவில் கலந்து கொண்டு இசைஞானி இளையராஜா அவர்களின் இசை நிகழ்ச்சியை கண்டு ரசித்தார். இவ்விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கலைஞானி கமல்ஹாசன், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்கள், மாண்பமை நீதியரசர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், முக்கிய பிரமுகர்கள், திரைப்படத் துறையை சார்ந்த கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.9.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவில் கலந்து கொண்டு இசைஞானி இளையராஜா அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.9.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவில் இசைஞானி இளையராஜா அவர்களின் சிம்பொனி இசையின் நடத்துனர் மைக்கேல் டாம்ஸ் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்.

## இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கின்ற வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில்

# “இசைஞானி இளையராஜா” பெயரில் ஆண்டுதோறும் விருது!

**சென்னை,செப்.15 –**

**இசைஞானி இளையராஜாவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இசைத்துறையில் ஆர்வத்துடன் சிறந்த இசையைப் படைக்கின்ற இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கின்ற விதமாக தமிழ்நாடு அரசு சார்பில் இனி ஆண்டு தோறும் ‘இசைஞானி இளையராஜா’ விருதுகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.9.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற “சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவில்” கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:**

“ராஜா... ராஜாதி ராஜன் இந்த ராஜா... நேற்று இல்லை நாளை இல்லை எப்பவும் நீ ராஜா...!” இசை எனும் தேனை உலகத்துக்கே தரும் இந்தத் தேனிக் காரரை பாராட்ட, புகழ நாம் எல்லோரும் இங்கே கூடியிருக்கிறோம்!

நம்முடைய இசைஞானி அவர்கள், கலைத் தாய்க்கு மட்டும் சொந்தமானவர் இல்லை; தமிழ்த் தாய்க்கும் சொந்தமானவர்! அதனால்தான், தமிழ்நாடு அரசு சார்பில், இந்தப் பாராட்டு விழாவை, அவரைக் கொண்டாடும் விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்!

### இசை ஞானியை பாராட்டுவதில் பெருமை!

பாராட்டும், புகழும் ராஜா அவர்களுக்கு புதிதா? கிடையாது.... நிச்சயமாக சொல்கிறேன்... இசைஞானி அவர்களை பாராட்டுவதால் நாம் தான் பெருமை அடைகிறோம்!

இசைஞானி இளையராஜா அவர்கள், தனது திரையுலகப் பயணத்தை தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகிறது! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய இதயங்களை ஆளத்தொடங்கி, ‘அரை நூற்றாண்டு காலம்’ ஆகிறது!

### சிம்பொனி சிகரம் தொட்ட தமிழருக்கு என் வாழ்த்து!

திரைப்பயணத்தில் பொன்விழா கண்டிருக்கும் ‘சிம்பொனி சிகரம் தொட்ட தமிழர்’ இளையராஜா அவர்களுக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் சார்பில், உங்களில் ஒருவனாக இருந்து என்னுடைய வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

பண்ணைபுரத்தில் இருந்து புறப்பட்ட இந்த மனிதர், திறமையும், உழைப்பும் இருந்தால், எப்பேர்ப்பட்ட உயரங்களையும் அடையலாம் என்று, அனைத்து மனிதர்களுக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்து கொண்டிருக்கிறார்! இந்த அரை நூற்றாண்டு காலத்தில் ராஜாவின் பாடல்களை முணுமுணுக்காத உதடுகளே தமிழ்நாட்டில் இருக்க முடியாது!

### அனைவருக்கும் ஊக்கம் தரும் இளையராஜாவின் இசைத் தாலாட்டு!

ராஜாவின் பாடல்களை மனதில் ஏற்றி, தங்களின் இன்ப துன்பங்களைப் பொருத்திப் பார்த்துக் கொள்ளாத மனிதர்களே இருக்க முடியாது! இளையராஜா அவர்களின் இசை – தாயாகத் தாலாட்டுகிறது! காதலின் உணர்வுகளைப் போற்றுகிறது! வெற்றிப் பயணத்துக்கு ஊக்கமளிக்கிறது! வலிகளை ஆற்றுகிறது!

உண்மையில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இவர் இளையராஜா மட்டுமல்ல; இணையற்ற ராஜா!

ஒரு ராஜா இருந்தால், அவருக்கென்று நாடு இருக்கும்; மக்கள் இருப்பார்கள்; எல்லைகள் இருக்கும்! ஆனால், இந்த ராஜா – மொழிகளைக் கடந்தவர் – நாடுகளைக் கடந்தவர் – எல்லைகளைக் கடந்தவர்! அனைத்து மக்களுக்குமானவர்! திரையிசையைக் கடந்த இளையராஜா அவர்களின் இசை, அவரது திறனை, அவரது வீச்சை, அவரது ஆற்றலை, அவரது ஆழத்தை, அவரது உயரத்தை, எடுத்துச் சொல்லும்! இந்த நேரத்தில், இசைஞானி அவர்களைப் பற்றி, சோஷியல் மீடியாவில் ஒருவர் எழுதிய சில வரிகளை சொல்ல விரும்புகிறேன்...

## பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.9.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவில் கலந்து கொண்டு இசைஞானி இளையராஜா அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்து, விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கலைஞானி கமல்ஹாசன், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்கள், மாண்பமை நீதியரசர்கள்,தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், முக்கிய பிரமுகர்கள், திரைப்படத் துறையை சார்ந்த கலைஞர்கள். இசைக் கலைஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இசை ஞானியிடம் நான் வைக்கும் கோரிக்கை!

இளையராஜா மட்டும் இசையமைத்திருந்தால்...! திருக்குறளும் நற்றிணையும் புறநானூறும் – குறுந்தொகையும் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் – பரிபாடலும் சிலப்பதிகாரமும் எங்களுக்கு மனப்பாடம் ஆகியிருக்கும் என்று எழுதியிருந்தார்!

இசைஞானி அவர்களே, நானும் இதையேதான் தமிழ் ஆர்வலராக உங்களிடம் கோரிக்கையாக வைக்கிறேன்!

சங்கத்தமிழுக்கு, தமிழ் இலக்கியங்களுக்கு நீங்கள் இசையமைத்து சில ஆல்பங்களை வெளியிட வேண்டும்! எப்போதும் முதலமைச்சரிடத்தில் தான் கோரிக்கை வைப்பார்கள்; ஆனால், முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டு மக்களின் சார்பில், தமிழர்களின் சார்பில், நான் உங்களுக்கு கோரிக்கை வைக்கிறேன். இசை ஆளுமையும், தமிழ்ப்புலமையும் கொண்ட நீங்கள், இந்தக் கடமையை செய்யவேண்டும்! ஏற்கனவே, தமிழ்நெஞ்சங்களில், சிம்மாசனமிட்டு உட்கார்ந்திருக்கின்ற உங்கள் மூலமாக, உங்கள் இசைமூலமாக, தமிழ்ச்சுவை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு பரிமாறப்படவேண்டும்! ஏனென்றால், “ராஜா கைய வெச்சா அது ராங்கா போனதில்ல...” அந்த நம்பிக்கையுடன் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்!

## சங்கத் தமிழ் இலக்கியங்களுக்கு இசையமைத்து ஆல்பங்களை வெளியிட வேண்டுகிறேன்!

### என்றைக்கும் உடன் பயனிக்கும் கலைஞர் தந்த இசைஞானி பட்டம்!

இசையால், நம் நெஞ்சங்களை ஆளும் இளையராஜா அவர்களுக்கு, எத்தனையோ புகழ் மகுடங்கள், பாராட்டு மாலைகள், பத்மபூஷண், பத்மவிபூஷண் போன்ற பட்டங்கள் இருந்தாலும், அவருக்கென அவருடைய ஆற்றலுக்கென பொருந்தி, அவருடன் என்றைக்கும் பயணிக்கின்ற பட்டம்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கிய ‘இசைஞானி’ பட்டம்! அது பட்டமா இல்லை, பெயராகவே நிலைத்துவிட்டது!

இசைஞானி அவர்களின் உயரங்களைப் பார்த்து பெருமைப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, இசைஞானி அவர்கள் வழங்கிய மரியாதை, யாரும் யாருக்கும் தராத மரியாதை!

வரலாற்றில் எத்தனையோ மாமனிதர்கள் ஒரே பிறந்தநாளை கொண்டாடக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால், யாரும் இன்னொருவருக்காக தங்களுடைய பிறந்தநாளை மாற்றிக்கொண்டது கிடையாது! ஆனால், இசைஞானி அவர்கள், தலைவர் கலைஞருக்காக தன்னுடைய பிறந்தநாளை ஜூன் 2ஆம் நாளாக மாற்றிக்கொண்டார்.

### இளைய ராஜாவின் வீட்டிற்கே சென்று வாழ்த்துத் தெரிவித்தேன்!

அந்த வகையில், உள்ளத்திலும் ராஜாவாக உயர்ந்து நிற்கிறார் இசைஞானி அவர்கள்! தமிழாலும் – இசையாலும் – உயர்ந்தது கலைஞருக்கும் – இசைஞானிக்கும் இருந்த நட்பு! தனிப்பட்ட முறையில் என்னால் மறக்க முடியாத நிகழ்வு என்றால், என்னுடைய மகள் செந்தாமரை அவர்களின் நாட்டிய அரங்கேற்றத்தில் இளையராஜா அவர்கள் பங்கேற்று வாழ்த்தினார். அந்த நட்போடு, அவர் லண்டனில் சிம்பொனி அரங்கேற்றம் செய்யப் போகிறார் என்று செய்தி வந்தவுடனே, அவருடைய வீட்டுக்கு முதல் நபராக சென்று என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துகளைத் தெரிவித்தேன்!

ராஜா அவர்களும் சிம்பொனி சாதனையை நிறைவேற்றிய வெற்றிக் களிப்புடன், என் வீட்டுக்கு வந்து என்னைப் பார்த்தார்! இந்த அன்புக்கு நான் என்றைக்கும் கட்டுப்பட்டவன்! கடமைப்பட்டவன்! அந்த அன்புடன் சொல்கிறேன்... இது இசைஞானி இளையராஜாவுக்காக நடத்தக்கூடிய பாராட்டு விழா மட்டுமல்ல! உங்களுக்கு நாங்கள் எல்லோரும் நன்றி தெரிவிக்கக்கூடிய விழா!

### இளையராஜாவின் சாதனைகளுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும்!

இப்படிப்பட்ட இந்த சிறப்பான விழாவில், ஒரு அறிவிப்பு வெளியிடாமல் நான் இருக்க முடியுமா? இசைத் துறையில், ஆர்வத்துடன் சிறந்த இசையைப் படைக்கின்ற இசைக்கலைஞர்களை ஊக்குவிக்கின்ற விதமாக தமிழ்நாடு அரசின் சார்பில், இனி ஆண்டு தோறும் ‘இசைஞானி இளையராஜா’ பெயரில் விருது



> **“நம்முடைய இசைஞானி அவர்கள், கலைத்தாய்க்கு மட்டும் சொந்தமானவர் இல்லை; தமிழ்த்தாய்க்கும் சொந்தமானவர்! அதனால்தான், தமிழ்நாடு அரசு சார்பில், இந்தப் பாராட்டு விழாவை, அவரைக் கொண்டாடும் விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்!”**

வழங்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

அறிவிப்பு மட்டுமல்ல, ஒரு கோரிக்கையும் முன்வைக்கிறேன். நமது இளையராஜாவின் சாதனைகளுக்கு எந்த மகுடம் சூட்டினாலும், அது சாதாரணம் தான். அப்படிப்பட்ட மேதைக்கு இந்தியாவின் உயரிய விருதான “பாரத ரத்னா” விருது வழங்கப்பட வேண்டும் என்ற ஆவலை இந்த மேடையில் நின்று உங்கள் அனைவரின் சார்பில், தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, உலகெங்கும் இருக்கக்கூடிய ராஜாவின் ரசிகர்களின் சார்பில் இந்த விழாவில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது நிச்சயம் நிறைவேறும் என்று நான் நம்புகிறேன்.

இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து வெற்றி கண்டிருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும், செய்தித்துறை அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

இசைஞானிக்காக இந்த விழாவுக்கு வந்து சிறப்பு செய்த அன்பு நண்பர்கள் என்னுடைய மதிப்பிற்குரிய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுக்கும், அதே போல், கலைஞானி கமல்ஹாசன் அவர்களுக்கும், கலையுலகைச் சார்ந்திருக்கக்கூடிய அத்தனை நண்பர்களுக்கும், தோழமைக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் அத்தனை பேருக்கும், நிறைவாக, இங்கு மட்டுமல்ல, தொலைக்காட்சி மூலமாகவும் கண்டு களித்துக் கொண்டிருக்கக்கூடிய கோடானுகோடி ரசிகர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இசை ஞானியின் பயணம் பல்லாண்டு தொடர வாழ்த்துகள்!

இந்த அரங்கத்தில், இசைஞானி அவர்களுடைய இசையைக் கேட்டு மயங்கியிருக்கும் எல்லோருடைய உணர்வுகளை, அவருடைய பாடல் வரிகளிலேயே சொல்லவேண்டும் என்றால், “இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே... இன்பத்தில் ஆடுது என் மனமே!”

**இசைஞானி அவர்களே... உங்கள் பயணம் இன்னும் பல்லாண்டுகாலம் தொடர வேண்டும்! தொடர வேண்டும்! என்று தமிழ் மக்களின் சார்பில் வாழ்த்துகிறேன்.**

**வாழ்க இளையராஜா! வாழ்க இசைராஜா!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை வழங்கினார்.